
# அகல்



தரம் 4A மாணவர்கள் - 2011

ம.மா/நு/தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம், தலவாக்கலை.

# அகல்

## தரம் 4 A மாணவர்கள்

ம.மா/நு/தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம்,
தலவாக்கலை.
2011

# இம்மலர் பற்றி

மலைகளுக்கிடையே மணிமகுடம் சூட்டி உயரக்கட்டிடத்தில் ஒய்யாரமாய் காட்சி தந்து சரித்திரம் படைத்த சாதனையாளர்கள் தடம் பதிக்க களமமைத்த பெருமையை தன்னத்தே கொண்ட பாடசாலையிது.

ஆலம் விழுதுகளாய் அடர்ந்து பரவி வானுயர கிளை பரப்பி வாழ்ந்து காட்டிய வள்ளல்கள் மத்தியில் சின்னஞ்சிறு இதழ் விரித்து மணம் பரப்பத் துடிக்கும் மலரிது.

ஒளி வீசும் தீபமாய்<br>
எழில் கொஞ்சும்<br>
வடிவமாய்<br>
"அகல்"<br>
இது அழியாச் சுடர்..<br>
அணையாச் சுடர்....



## மேலதிக வலயக் கல்விப் பணிப்பாளரின் ஆசியுரை



மாறிவரும் கணனியுகத்திற்கேற்ப மாற்றங்களைக் காணும் மையமாக பாடசாலைகள் திகழ்கின்றன. புதிய கல்வி சீர்த்திருத்தத்தின்படி கலைத்திட்டங்களும் மாற்றமுற, அவை நோக்கியதான விரிவான செயல்திட்டங்கள் பரிணமித்து வருவதைக் காணலாம்.

கல்வியின் முக்கிய நோக்கம் மாணவர்களிடம் கற்றலைத் தோற்றுவித்தலாகும். அறிவு சார்ந்த செயல்கள் கற்றல் - கற்பித்தலில் முக்கிய பங்கு வகிக்கின்றதெனலாம். மாணவர்களது சிந்தனைத்திறன், ஆக்கத்திறன் என்பன வினைதிறனுள்ளவையாக அமைதல் அவசியம்.

அவ்வகையில் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் தரம் 4A இல் "அகல்'' எனும் மலர் வெளியிடப்படுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். இதற்காக உழைத்த ஒவ்வொருவரையும் பாராட்டுவதோடு மலர் சிறப்புற வெளிவர மனதார வாழ்த்துகிறேன்.

S.P. இராஜசேகரம்
மேலதிக வலயக் கல்விப் பணிப்பாளர்
கல்விப் பணிமனை
நுவரெலியா

# கோட்டக்கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி



நுவரெலியா கல்வி வலயத்தில் தமிழ் மாணவர்களுக்கு கல்விச் செல்வத்தினை அள்ளி வழங்குகின்ற தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தின் தரம் 4A மாணவர்களின் சுய ஆக்கங்களின் தொகுப்பான அகல் சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். அடிப்படைத் தகைமைகளில் முதற் தொகுதியான தொடர்பாடலில் எழுத்தறிவு, எண்ணறிவு போன்ற தேர்ச்சிகளை மாணவர்கள் வெளிக்கொணர்ந்திருக்கிறார்கள். இம்மாணவர்கள் கல்வித் துறையில் சிறந்து விளங்க வாழ்த்துவதோடு நல்ல ஒழுக்கமுடையவராகவும் மனவலிமைமிக்கவராகவும் தனது அறிவை பெருக்கி தன்னுடைய சுய வலிமையைக்கொண்டு சொந்தக்காலில் நின்று வாழ வாழ்த்துகிறேன்.

“என்கடன் பணி செய்து கிடப்பதே” என்று பணியாற்றும் தரம் நான்கின் ஆசிரியையை மனதார வாழ்த்துகிறேன். அத்துடன் தரம் ஒன்றிலிருந்து இம் மாணவர்களுக்கு கற்பித்து தகுந்த பயிற்சியளித்த ஆசிரியர்களைப் பாராட்டுவதோடு வழிகாட்டிய அதிபர், பிரதி அதிபர்கள், பகுதித்தலைவர் ஆகியோருக்கு எமது கோட்டத்தின் சார்பாக நன்றிகள்.

எம்.சோமசுந்தரம்<br>
கோட்டக்கல்விப்பணிப்பாளர்<br>
வலயக் கல்விக்காரியாலயம்<br>
நுவரெலியா

## ஆரம்பக் கல்விப் பணிப்பாளரின் ஆசியுரை



மனிதனை நல்ல மனிதனாக வாழவைப்பதே கல்வியின் பிரதான நோக்கமாகும். கல்வியை பயனுறுதி வாய்ந்ததாக உருவாக்க அடித்தளமாக அமைவது ஆரம்பக்கல்வியாகும்.

பிள்ளைகளின் எதிர்கால சவால்களுக்கு மட்டுமன்றி நிகழ்கால சவால்களையும் வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு அவர்களை சிறந்த ஆளுமைப்பண்புகள் உடையவர்களாகவும் சிறந்த நற்பிரஜைகளாகவும் உருவாக்குதல் என்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். அத்துடன் பிள்ளைகளின் உள்ளார்ந்த ஆற்றல்கள் திறன்கள் மனப்பாங்குகள் தேவைகள் பிரச்சனைகள் என்பவற்றின் அடிப்படையில் செயற்படுத்தல் அவசியமாகும். இவற்றை செயற்படுத்துவதற்கு ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடுகள் வகுப்பறை முகாமைத்துவம் என்பன ஆளுமைமிக்கதாகவும் அமைதல் வேண்டும். ஆகவே கற்றல்

கற்பித்தல் செயற்பாடுகளில் இணைப்பாடவிதான செயற்பாடுகளும் இந்நோக்கங்களை அடையச்செய்வதற்கு உதவிபுரிகிறது. அந்தவகையிலே மமா/நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தின் தரம் 4A வகுப்புக்கு பொறுப்பான ஆசிரியை திருமதி. எஸ்.பவானி அவர்களின் வழிகாட்டலின் கீழ் 4ம் வகுப்பு மாணவர்களின் சுய ஆக்கங்களுடன் உருவாக்கப்பட்ட இந்நூலினை மிகவும் சிறப்பான முறையிலே வெளியிடுவதனையிட்டு பெருமிதம் அடைகின்றேன்..

ஆரம்பக்கல்விப் பிரிவில் இவ்வாறான ஒரு நூலினை வெளியிடுவதற்கு முன்னின்று முனைப்புடன் செயற்பட்ட ஆசிரியை திருமதி. எஸ். பவானி அவர்களுக்கு எனது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களைத்

தெரிவிப்பதுடன் இச்செயற்பாட்டுக்கு பல்வேறு வகையிலும் வசதி வாய்ப்புகளைவழங்கிய கல்லூரி அதிபர் திரு. ஆர். கிருஸ்ணசாமி மற்றும் ஆரம்பப்பிரிவு பகுதித்தலைவர் திருமதி. எஸ்.புஸ்பராணி ஆகியோருக்கும் நுவரெலியா கல்வி வலயத்தின் ஆரம்பக்கல்வி உதவி கல்விப்பணிப்பாளர் என்ற வகையில் எனது பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

S. செல்வராஜா

(அகில இலங்கை சமாதான நீதவான்)

உதவி கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி)

வலய கல்விக்காரியாலயம்

நுவரெலியா

# கல்லூரி அதிபரின் ஆசியுரை



ஆசிரிய சேவையானது புனிதமானது அர்ப்பணிப்பானது என்றெல்லாம் கூறப்படுகிறது. அதனை அர்த்தமுடையதாக மாற்றுவது என்பது ஆசிரியரின் சேவையும் தொடர்ச்சியான செயற்பாடும் ஆகும் இதனை சிறப்பாக நிறைவேற்றி வரும் ஆசிரியை பவானியின் மற்றுமொரு அர்த்தமிக்க சேவையின் வெளிப்பாடே மாணவர்களின் ஆற்றல்களையும் ஆக்கங்களையும் வெளியிடும் தளமாக அமையும் நூல் வெளியீடாகும். இந்த உன்னத பணியினால் மாணவர்களின் எதிர்காலம் வலு ஊட்டப்படுவது நிச்சயிக்கப்பட்ட ஒரு விடயமாகும். எனவே இப்பயன் மிக்க பணியினை முன்னெடுக்கும் இவ்வாசிரியரின் முயற்சி வெற்றி பெறவும் அதன் மூலம் மாணவர் சமுதாயம் பலன் பெறவும் எனது இதய பூர்வமான நல்லாசிகளைக் கூறுவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி

திரு.R.கிருஷ்ணசாமி

அதிபர்

## பிரதி அதிபரின் உள்ளத்திலிருந்து



மாணவர்களை சமூகத்தின் நற்பிரஜைகளாக வார்த்தெடுப்பதே ஆசிரியர் ஒருவரது தலையாய கடமை ஆகும். இன்றைய சிறார்கள் நாளைய தலைவர்கள் என்ற கூற்றை வெறும் வார்த்தையாக மட்டுமன்றி, வாழ்க்கையில் கடைப்பிடித்து சிறுவர்களை வழிநடாத்தி, கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி அவர்களைச் சிறந்த ஆளுமையுடன் சமூகத்திற்கு அறிமுகப்படுத்துவதில் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களின் பங்களிப்பே முதன்மையானது என்றால் அது மிகையில்லை.

அவ்வகையில் எமது பாடசாலையின் ஆரம்பப்பிரிவு ஆசிரியை திருமதி. எஸ். பவானி தனது அளப்பெரும் பங்களிப்பினை ஆரம்பப்பிரிவுக்கு அளித்துள்ளார் என்றே கூறவேண்டும். தற்போது தரம் 4 இன் வகுப்பாசிரியராகக் கடமையாற்றும் இவர் வெறும் ஆசிரியராக மட்டுமன்றி அம்மாணவர்களுக்குத் தாயாக, தாதியாக, தோழியாக சமயத்துக்கேற்றவாறு தன்னை அர்ப்பணித்துள்ளமை இவரது சிறப்பம்சமாகும்.

மேலும் தனக்கு வழங்கப்படும் பொறுப்புக்களை நேர்த்தியாகச் செய்து முடிப்பதிலும், வகுப்பறையைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கேற்றதாக ஒழுங்கமைப்பதிலும் பவானிக்கு நிகர் பவானியே என்பது யாவரும் அறிந்த விடயமே. இந்தவகையில் தரம் 4 மாணவர்களைக் கொண்டு புத்தகம் வெளியிடும் இவரது கன்னிமுயற்சி பாராட்டத்தக்க ஒன்றாகும். காலத்தின் தேவையை ஒட்டி, மாணவர்களது பல்வேறு திறமைகளையும் எண்ணங்களையும் எழுத்துக்களாகச்

சுமந்துவரும் இந்த சஞ்சிகை தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தின் தனிப்பெரும் முயற்சியாகவும் தூண்டுகோலாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை. மாணவர்களை வெறுமனே ஏட்டுக்கல்விக்காக மட்டும் பழக்கப்படுத்தாமல் அவர்களது பலதரப்பட்ட திறமைகளையும் வெளிக்கொணர்ந்து அவர்களை ஆளுமைமிக்கவர்களாக மாற்றுவதற்கு இந்த சஞ்சிகையும் அதன் ஆக்கங்களும் துணைபுரியும் என்று கூறினால் அது மிகையல்ல.

எனவே இத்தகைய முயற்சியினை முன்னெடுத்துச் செல்லும் திருமதி. பவானியின் ஆசிரியப்பணி மென்மேலும் சிறப்புற உளமார வாழ்த்துகிறேன்.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத புகழென்று சங்கே முழங்கு"

திருமதி. ஐ. நவரட்ணம்
பிரதி அதிபர்

## ஆசிரிய ஆலோசகரின் ஆசியுரை

மாணவர்களின் சிந்தனையைத் தூண்டவும், மொழித்திறனை விருத்தி செய்வதற்கும் ஆசிரியர் 'அகல்' என்ற சிறிய நூலைத் தந்திருப்பது நல்லதொரு கன்னி முயற்சியாகும்.

தேர்ச்சி மையக்கல்வியை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களின் ஆக்கங்களைத் திரட்டுவதில் பெரும் முயற்சி செய்துள்ளார் 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்ற முதுமொழிக்கேற்ப இளமையில் இருந்தே ஆற்றல்கள் வளர்த்தெடுக்கப்படல் வேண்டும்.

அவ்வகையில் நான்காந்தரத்தில் எமது கோட்டம் II இல் முதன் முதலாக இத்தகைய ஒரு நூல் வெளிவருவதை இட்டு நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளிலும் திறமைமிக்க ஆசிரியராவார் அவரது முயற்சிக்கு எனது பாராட்டுக்கள்.

இந்த கன்னி நூல் மென்மேலும் வளர்ந்து செல்ல வேண்டும். மாணவர்கள் சுயமாக முன்வந்து ஆக்கங்களை படைத்துள்ளனர். ஆசிரிய ஆலோசகர் என்ற வகையில் எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி. P. பத்மஜோதி
ஆசிரிய ஆலோசகர் (ஆரம்பக்கல்வி)
கோட்டம் II
வலயக்கல்விக் காரியாலயம்
நுவரெலியா

# பிரிவுத் தலைவரின் வாழ்த்துரை



வளரும் பயிரை முளையிலேயே தெரியும் என்பார்கள். அதன் அடிப்படையில் இந்த சின்னஞ் சிறார்களின் முயற்சியானது கன்னி முயற்சியாக அமைந்த போதும் ஒளிமயமான எதிர்காலத்தின் வாசலை எடுத்து இயம்புகிறது.

படைப்பாளிகள் உருவாக்கப்படுவதில்லை தானாகவே உருவாகுகின்றனர். இக்கருத்து ஆரம்பக்கல்வி ஆசிரியரின் வழிக்காட்டல்களுடன் உருவாக்கப்பட்டிருப்பினும் இம் முயற்சி மாணவர்களையும் சாரும்.

இப்பகுதியில் இடம்பெற்ற படைப்புகள் ஆக்கத்திறன் சார் படைப்புக்கள், மாணவச் செல்வங்களின் ஆற்றல்களை அளவிடுவதற்கான அளவு கோலாக அமையும். எதிர்காலத்தில் இலக்கிய உலகிலும் அறிவியல் உலகிலும் தனக்கென ஒரு முத்திரை படைப்பதற்கு இத்தருணத்தில் ஆசி கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

"படைப்பாளிகளின் எண்ண ஓட்டங்கள் எதிர்காலத்தின் வாசற்படி"

நன்றி.

திருமதி. சி. புஸ்பராணி
பிரிவுத் தலைவர் (ஆரம்பக்கல்வி)

# வகுப்பாசிரியரின் சிந்தனையிலிருந்து



எழில் கொஞ்சும் மத்திய மலைநாட்டில் பசுங்கம்பளம் விரித்தாற்போல் தேயிலைத் தோட்டங்கள் கண்ணுக்கினிய நீர்வீழ்ச்சிகளைக் கொண்ட நுவரெலியா மாவட்டத்தில் பனிபடர்ந்த மலைகளுக்கிடையில் தலைநிமிர்ந்திருக்கிறது தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம். முதலாம் தரம் முதல் உயர்தரம் வரையிலான வகுப்புக்களைக் கொண்ட இப்பாடசாலையில் ஆரம்பப்பிரிவில் தரம் 4A ஐச் சேர்ந்த மாணவர்களின் சுய ஆக்கங்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட ஒரு இதழே 'அகல்'

கல்வியின் மூலம் பிள்ளைகள் தம் எதிர்கால வாழ்க்கையை வெற்றிகரமாக்கிக்கொள்ளும் நிலைமை உருவாக வேண்டும். பரீட்சைகளை மாத்திரம் நோக்கமாகக் கொண்டு கல்வியினை கற்காது இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பங்குபற்றுவதனூடாக மாணவர்களின் தன்னம்பிக்கை, சுயகட்டுப்பாடு போன்றவற்றைக் கட்டியெழுப்ப முடியுமென்ற கோட்பாட்டின் கீழ் கலைத்திட்டத்தில் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் முக்கியத்துவமளிக்கப் படுகின்றது. அந்த வகையில் குறிப்பிட்ட சில செயற்பாடுகள் கற்றல் கற்பித்தலில் முக்கிய அங்கம் வகிக்கின்றது.

இன்றைய காலகட்டத்தில் நவீன தொழில் நுட்ப சாதனங்களின் ஆதிக்கத்தினால் கட்டுண்டு கிடக்கின்ற சூழ்நிலையில் மாணவர்களின் கற்றல் சார்ந்த தேடல்கள் அருகிச் செல்கின்றன. இந்நிலைமை எமது எதிர்கால கல்வி உலகு எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவாலாகும். இதனை வெற்றி கொள்வது எம் அனைவரினதும பணியாகும்.

எனவே இப்பிள்ளைகளின் ஆசானாகிய நான் நாளுக்கு நாள் தம் அறிவை இற்றைப்படுத்திக்கொள்வதற்காக சிறந்த நூல்களைத்தேடி வாசிக்கும் பழக்கத்தை உருவாக்குவதிலும், சுயமாக சிந்தித்து எழுதுந்திறனை விருத்தி செய்வதிலும் வழிநடத்தியமையின் அறுவடையே இச்சிறுமலராகும். இவ் 'அகல்' எனும் தீபம் சுடர்விட்டு பிரகாசிக்க ஊக்கமளித்த நல்லிதயங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள் பற்பல.

திருமதி. S. பவானி
தரம் - 4A
வகுப்பாசிரியர்

உள்ளே.........


ஆசிச்செய்தி - திரு. எஸ்.பீ. இராஜசேகரம்
மேலதிக வலயக் கல்விப்பணிப்பாளர் III

ஆசிச்செய்தி - திரு. எம். சோமசுந்தரம்
கோட்டக் கல்விப் பணிப்பாளர் IV

ஆசிச்செய்தி - திரு. எஸ். செல்வராஜா
உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி) V

ஆசிச்செய்தி - திரு. ஆர். கிருஸ்ணசாமி - அதிபர் VI

ஆசிச்செய்தி - திருமதி. ஐ. நவரட்ணம் - பிரதி அதிபர் VII

ஆசிச்செய்தி - திருமதி பி. பத்மஜோதி - ஆசிரிய ஆலோசகர் X

ஆசிச்செய்தி - திருமதி. சி. புஸ்பராணி - பிரிவுத்தலைவர் XI

வகுப்பாசிரியர் உரை - திருமதி. எஸ். பவானி XII

எமது நாடு - த. தேனுஜா 01

எமது பாடசாலை - பா. விஷாலி 02

எனது செல்லப்பிராணி - வீ. பிரவீன் காந்த் 03

எமது உணவு - வி. லக்ஷனா 04

நீர் - தே. பவிஸ்ணவி 05

எனது செல்லப்பிராணி - கே. சதுர்சியா 06

எமது ஆசிரியர் - ம. ஜனகீர்த் 07

நாம் நல்லவர்களாக வாழ - அ.என்றூ 08

ஒத்த கருத்துச்சொற்கள் - ஜெ.வசிதரன் 09

எமது பெற்றோர் - சி. தில்ருக்ஷிகா 10

தெரிந்துக்கொள்வோம் - ஜீ. டிலானி 11

ஒரு சொல் தொடர்மொழி - எஸ். சபேஷன் 12

ஒரு பொருள் பல சொற்கள் - பீ.ஜெனிட்டா 13

பழமொழிகள் - எல். சாந்தமலர் 14

ஒத்த கருத்துள்ள சொற்கள் - எஸ். டிலக்ஷன் 15

எனது செல்லப்பிராணி - சி. குமதினி 16

சிந்தனைத்துளிகள் - கே. சனுஷாலினி 17

ஒருமை பன்மை - எம். மிதுர்ஷிகா 18

மரபுத்தொடர்கள் - எஸ். மொஹமட் மாஹிர் 19

நல்ல பழக்க வழக்கங்கள் - நி. லதுர்ஷனா 20

பொன்மொழிகள் - எஸ். யுவராஜ் 21

பொது அறிவு - எஸ். துஷாந்தன் 22

தபாற்கந்தோர் - கே.பவித்ரா 23

கணினி - எஸ். யனுஜா 24

நான் வைத்தியரானால் - ஏ. மொஹமட் இப்ராஹிம் 25

விடுகதைகளும் விடைகளும் - மு. கஜாந்தினி 26

விடுகதைகளும் விடைகளும் - கே.கேதீசன் 27

மரங்கள் 28

ரோஜா 29

அகல் ஒளி வீச.... 30



## த. தேனுஜா

# எமது நாடு

- ✶ ஆசியாக் கண்டத்தின் அழகிய தீவாக நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்டுள்ளது இலங்கை எனும் எமது நாடு.
- ✶ எமது நாட்டைச் சூழ இந்து சமூத்திரம் காணப்படுவதால் எமது நாட்டை இந்து சமூத்திரத்தின் முத்து என்று அழைப்பர்.
- ✶ இலங்கை எனும் திருநாமம் பெற்ற எமது நாட்டில் தமிழர், பறங்கியர், சிங்களவர், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோர் ஒற்றுமையாக வாழ்கின்றனர்.
- ✶ எமது நாட்டின் ஜனாதிபதி மேன்மை தங்கிய திரு. மஹிந்த இராஜ பக்ஷஅவர்கள்.
- ✶ எமது நாட்டின் தேசிய கீதத்தை இயற்றியவர் ஆனந்த சமரக்கோன்.
- ✶ எமது நாட்டின் தேசிய மலர் நீலோற்பலம்.
- ✶ எமது நாட்டின் மிக நீளமான நதி மகாவலி கங்கை
- ✶ எமது நாட்டின் உயரமான மலை பீதுறுதாலகால மலை.
- ✶ எமது நாட்டின் தேசிய கொடியிலுள்ள சிங்கம் நாட்டின் தலைவர் உடல் வலிமையைக் குறிப்பதோடு நான்கு இலைகளும் தர்ம உபதேச இலைகளாகும்.
- ✶ எமது நாட்டின் இலவசக் கல்வியின் தந்தை C.W.W கன்னங்கர அவர்கள்.
- ✶ இலங்கையின் அடையாளத்தை குறித்து நிற்கும் தேசிய சின்னங்கள் தேசியக் கொடி, தேசிய கீதம், தேசிய இலட்சினை என்பனவாகும்.
- ✶ இலங்கை 09 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- ✶ இலங்கையிலுள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை 25 ஆகும்
- ✶ தேயிலை, தென்னை, இறப்பர் என்பன எமது நாட்டின் பிரதான பயிர்களாகும்.
- ✶ இயற்கை அழகுமிக்க பல்வேறு இடங்களைக் கொண்டுள்ள எமது நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் வருகை தருவர்.



பா. விஷாலி

## எமது பாடசாலை

* இயற்கை எழில் கொஞ்சும் மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் தலவாக்கலையில் எமது பாடசாலை அமைந்துள்ளது.
* வற்றாத நதியின் அருகில் உயர்ந்த மலைகளின் மத்தியில் கல்விக்கண்ணை திறக்கும் எமது கலைக்கூடம் அமைந்துள்ளமை சிறப்பாகும்.
* எமது பாடசாலையின் பெயர் நு/தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம்.
* இதனை ஸ்தாபித்தவர் அமரர்.கௌரவ தொண்டமான் ஐயா அவர்கள் ஆவார்.
* எமது பாடசாலை அதிபரின் பெயர் திரு.ரெ.கிருஷ்ணசாமி ஐயா அவர்கள்.
* எமது பாடசாலை விழாக்களின் போது பாடசாலைக் கொடி ஏற்றப்பட்டு பாடசாலை கீதம் இசைக்கப்படும்..
* எமது பாடசாலையில் கணினிக்கூடம்,விஞ்ஞானகூடம் என்பன உண்டு.
* எனது ஆசிரியையின் பெயர் திருமதி. செ.பவானி.
* 2009 ஆம் ஆண்டில் பழைய கட்டிடத்திலிருந்து புதிய கட்டிடத்திற்கு பாடசாலை இடம் மாற்றப்பட்டது.
* எமது பாடசாலைக்கு அருகில் மிகப் பெரிய மைதானம் உண்டு.
* நூலகத்தினுள் நுழைந்தால் புதிய புதிய பல பயனுள்ள நூல்களைக் காணலாம்.
* பாடசாலையில் உள்ள அழகான சங்கீத அறையில் பலவிதமான சங்கீத உபகரணங்களைக் காணலாம்.
* எமது பாடசாலையில் 1 தொடக்கம் 13 வரையான வகுப்புகள் உண்டு.



## வீ. பிரவீன்காந்

# எனது செல்லப் பிராணி (நாய்)

* நாய் ஒரு செல்லப்பிராணி ஆகும்.
* நாய்க்கு கூர்மையான மோப்பசக்தி, கேட்டல் திறன், பார்வைத் திறன் என்பன உண்டு.
* அது உணவை நன்றாக மென்று விழுங்கும்.
* அது அனைத்தும் உண்ணி ஆகும்.
* நாய் கறுப்பு, வெள்ளை போன்ற நிறங்களில் இருக்கும்.
* நாய் பாதுகாப்பிற்கு உதவுவதோடு திறமையாக வேட்டையாடும்.
* அது கண் தெரியாதவர்களுக்கு உதவுவது போல் எஜமானின் வீட்டைக் கண்மணி போல் காக்கும்.
* அதற்கு சுவைத்திறன் உண்டு.
* வேட்டை நாய்கள் கூட்டமாக சென்று உணவு உட்கொள்ளும்.
* நாய் பகலில் நடமாடும்.
* அது இறைச்சிகளை விரும்பி உண்ணும்.

**ஊக்கமது கைவிடேல்**

எப்பொழுதும் உனது உற்சாகத்தை இழந்து விடாதே.



## வி. லக்ஷனா

# எமது உணவு

* நாம் உயிர் வாழவும், உடல் நலம் பேணவும், உடல் வளர்ச்சியடையவும் உணவை உண்ணுகின்றோம்.
* கலப்பு உணவில் புரதம், காபோவைதரேற்று, விற்றமின், நார்ப்பொருள் என்பன அடங்கும்.
* உணவு உண்ணும் முன் கைகளை சவர்க்காரம் இட்டு கழுவுதல் அவசியம்.
* உணவு உண்ணுவதால் மனிதனுக்கு மூளை வளர்ச்சி ஏற்படும்.
* சில உணவுகளை பச்சையாக உண்ணுவதால் முழுமையான போசாக்கு கிடைக்கும்.
* சத்துள்ள உணவை உண்ணுதல் நாம் ஆரோக்கியமாக வாழ வழிவகுக்கும்.
* உணவு உண்ட பின் பழங்கள் உண்ணுதல் அவசியம்.
* தானியங்கள் உண்ணுவதால் நல்ல பலம் பெறலாம்.
* கீரைவகைகளை உண்ணுவதால் ஞாபக சக்தி கிடைக்கும்.
* போஷாக்கான உணவை உண்போம் புதுமைகளை படைப்போம்.

**ஒப்புரவு ஒழுகு**

உலகத்தின் போக்கு எப்படி என அறிந்து அதற்கேற்றபடி நடந்து கொள்.



தே. பவிஸ்ணவி

# நீர்

* நீர் எமக்கு குடிக்க, குளிக்க, சமைக்க, மின்சார உற்பத்திக்கு என பல்வேறு தேவைகளுக்கு உதவுகின்றது.
* நாம் ஆறு, குழாய், குளம், கிணறு ஆகியவற்றிலிருந்து நீரைப் பெற்றுக் கொள்ளலாம்.
* நீர் ஒரு ‘சர்வ கரைப்பான்’ ஆகும்.
* நீர் மணமற்ற, சுவையற்ற, நிறமற்ற, நடுநிலையான இயல்புகளைக் கொண்டது.
* விவசாய தொழிலுக்கு நீர் உதவி செய்கின்றது.
* அசுத்தமான நீரைப் பருகுவதால் கொலரா, வயிற்றோட்டம், மஞ்சட்காய்ச்சல், நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்கள் பரவும்.
* நாம் எப்போதும் சுத்தமான நீரைப் பருகுதல் வேண்டும்.
* மழை பெய்வதனால் நிலத்தை அடையும் நீர் மீண்டும் சூரிய வெப்பத்தினால் ஆவியாகி மேலே சென்று ஒடுங்கி மழை முகில்களாகின்றன.
* நீரினால் எமக்கு நிறைய பயன்கள் கிடைக்கின்றன.
* நாம் கொதித்து ஆறிய நீரைப் பருகுதல் வேண்டும்.

**அறஞ் செய விரும்பு**

வேதாகமங்களால் கூறப்பட்ட சிறந்த வாழ்வை மேற்கொள்ள விரும்பு



## கே. சதுர்ஷியா

# எனது செல்லப்பிராணி

* எனது செல்லப்பிராணி பூனை
* அது பல நிறங்களையுடைய பிராணி
* அது பால் குடிக்கும்.
* எனது செல்லப்பிராணிக்கு எலியைப் பிடிக்கும்.
* எனது செல்லப்பிராணியை நான் வீட்டில் பாதுகாப்பாக வளர்க்கின்றேன்.
* இது உணவை மென்று விழுங்கும்.
* எனது பூனை ஒரு அனைத்துமுண்ணி
* அது குறைந்த வெளிச்சத்திலும் திறமையாக வேட்டையாடக் கூடியது.
* எனது செல்லப்பிராணிக்கு கூர்மையான கேட்டல்திறன், அதிக மோப்பசக்தி, கூர்மையான பார்வைத் திறனும் உண்டு.

**உடையது விளம்பேல்**

உன்னிடம் உள்ள திறமைகளை எல்லாம் ஊர் மக்களறியச் சொல்லாதே!



## ம. ஜனகீரத்

# ஆசிரியர்

எமக்கு எண் எழுத்தைக் கற்பிப்பவர் ஆசிரியர்கள். அவர்களை நாம் ஆசான், உபாத்தியாயன் என்றெல்லாம் அழைப்போம். பாடசாலையில் நல்ல பழக்கவழக்கங்களையும், பாடங்களையும் எமக்குக் கற்றுத் தருவர். நாம் நல்லவர்களாக வாழ வழிகாட்டுவர். எதிர் காலத்தில் சிறந்த மனிதர்களாய் திகழ எம்மைப் பயிற்றுவிப்பர்.

அவ்வாறே எமது ஆசிரியரின் பெயர் திருமதி செ.பவானி அவர்கள் எமக்கு பாடல்கள், கதைகள், விளையாட்டுக்களையும் சொல்லித் தருவார். அவர் தரம் ஒன்றிலிருந்து எமக்குக் கற்றுத் தருகிறார். புலமைப் பரிசில் பரீட்சைக்காக. எம்மைத் தயார் படுத்துகின்றார். அவர் எல்லோர் மீதும் அன்பாக இருப்பார். எமக்குத் தேவையான எல்லா விடயங்களையும் கற்றுத்தரும் ஆசிரியரை நாம் மதிப்போம்.

**பெரியாரைத் துணைகொள்**

அறிவிலும் ஆற்றலிலும் ஒழுக்கத்திலும் சிறந்த பெரியவர்களை உன் வாழ்வுக்குத் துணையாகக் கொள்வாயாக.



எ. என்றூ

## நாம் நல்லவர்களாக வாழ

* தினமும் இறைவனை வழிபடுதல் வேண்டும்.
* பிறருக்கு உதவி செய்தல் நற்பண்பாகும்.
* பொறுமையுடன் செயலாற்றுதல் வேண்டும்.
* பகிர்ந்து உண்ணுதல் வேண்டும்
* எப்போதும் உண்மை பேசுதல் வேண்டும்.
* பெற்றோரை, ஆசிரியர்களை, முதியோரை மதித்து நடவுதல் அவசியம்.
* ஏழைகளுக்கு உதவுதல் வேண்டும்.
* எல்லோருடனும் நட்புறவுடன் பழகுதல் நற்பண்பாகும்.
* எப்போதும் இனிய சொற்களை பேசுதல் நன்று.
* செய்நன்றி மறவாமல் வாழ வேண்டும்.
* பெரியோரின் அறிவுரைகளைக் கேட்க வேண்டும்.
* நல்லவர்களாய் வாழ்ந்தவர்களின் நல்ல விடயங்களைப் பின்பற்றலாம்.
* நாமும் நல்லவர்களாய் நற்பிரஜையாக வாழ்வோம்.

**ஓதுவது ஒழியேல்**

எக்காரணத்தை முன்னிட்டும் நீ கல்வி கற்பதை விட்டு விடாதே.



ஜெ. வசிதரன்

# எதிர்க்கருத்து சொற்கள்

✶ சுத்தம் - அசுத்தம்

✶ ஏற்றுமதி - இறக்குமதி

✶ சண்டை - சமாதானம்

✶ இலகு - கடினம்

✶ கூச்சல் - மௌனம்

✶ ஞாபகம் - மறதி

✶ இரவல் - சொந்தம்

✶ பெருமை - சிறுமை

✶ உலோபி - வள்ளல்

✶ தோற்றம் - மறைவு

✶ சினம் - சாந்தம்

✶ வானம் - வையகம்

✶ இளமை - முதுமை

✶ தூய்மை - அழுக்கு

✶ இயற்கை - செயற்கை

✶ துயில் - விழிப்பு

✶ அமைதி - ஆரவாரம்

✶ நிழல் - வெயில்

✶ அண்மை - சேய்மை

✶ தாமதம் - விரைவு

**ஐயம் இட்டு உண்**

பிச்சை கேட்பர் இருப்பின் அவருக்கு முதலில் பிச்சை போட்ட பிறகே நீ சாப்பிடு.



ச. தில்ருக்ஷிகா

## எமது பெற்றோர்

✶ பெற்றோர் எமது கண்கண்ட தெய்வம்.
✶ எமது பெற்றோர் எமக்கு நோய் வந்தால் கவனிப்பார்கள்.
✶ பெற்றோர் எம் மீது அதிகளவு அன்பு வைத்திருப்பர்.
✶ நாம் பெற்றோர் சொல் கேட்க வேண்டும்.
✶ எமது பெற்றோர் தமது உயிர் போல எம்மைப் பாதுகாப்பர்.
✶ பெற்றோர் சொல்வது எம்மை திருத்துவதற்காக மட்டுமல்ல எம்மை நல்லவராக மாற்றுவதற்காகத்தான்.
✶ பெற்றோர் எம்முடன் இருப்பது அனைத்துலகமும் எம்முடன் இருப்பது போல இருக்கும்.
✶ பெற்றோருக்கு எம்மால் இயன்ற வேலைகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

**தந்தை தாய் பேண்**

உனது தாய் தந்தையரை அன்புடன் ஆதரித்து அவர்களை காப்பாற்று



G. டிலானி

# தெரிந்து கொள்வோம்

| இனத்தவர் | புனித நூல் | பண்டிகை |
|---|---|---|
| தமிழர் | பகவத் கீதை | தைப்பொங்கல், தீபாவளி, சிவராத்திரி |
| சிங்களவர் | திரிபீடகம் | வெசாக், வருடப்பிறப்பு |
| முஸ்லிம் | திருக்குர்ஆன் | ஹஜ் பெருநாள், நபி பெருநாள் |
| கிறிஸ்தவர் | பைபிலள் | கிறிஸ்மஸ், உயிர்த்த ஞாயிறு |

**இளமையில் கல்**

இளமைப் பிராயத்திலேயே கல்வியைக் கற்றுக்கொள்



## ச. சபேஷன்

| ஒரு சொல் | | தொடர்மொழி |
|---|---|---|
| ✶ சுயசரிதை | - | ஒருவர் தாமே தன்னைப் பற்றி எழுதும் வரலாறு. |
| ✶ சுயநலவாதி | - | தனது நலனை மட்டும் எண்ணி வாழ்பவன். |
| ✶ ஊதாரி | - | கண்மூடித்தனமாக பணத்தை வீணே செலவு செய்பவன். |
| ✶ அணிந்துரை | - | ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த பிறர் வழங்கும் புகழ் உரை. |
| ✶ களஞ்சியம் | - | பொருள் பண்டங்களை சேர்த்து வைக்குமிடம். |
| ✶ ஆத்திகன் | - | கடவுள் இருக்கின்றார் என நம்புகிறவன். |
| ✶ நாத்திகன் | - | கடவுள் இல்லை என நம்புகிறவன். |
| ✶ அநாதை | - | தாய் தந்தையை இழந்தவர். |
| ✶ அகதி | - | அனைத்து உடமைகளையும் இழந்தவன். |
| ✶ தீர்ப்பு | - | விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது. |
| ✶ நூதனசாலை | - | புராதன பொருட்களை சேகரித்து வைக்குமிடம். |
| ✶ அகராதி | - | அகர வரிசைப்படி சொற்களுக்குப் பொருள் கூறும் நூல் |

**கடிவது மற**

கோபம் உண்டாக்கும் பேச்சுக்களைப் பேசாமல் மறந்து விடு



## பே. ஜெனிட்டா

# ஒரு பொருள் பல சொற்கள்.

* அரசன் - மன்னன், வேந்தன், கோ, இராஜா.
* அன்பு - பரிவு, பற்று, நேயம், பிரியம், பாசம்.
* ஆசை - விருப்பம், ஆவல், வேட்கை, அவா, வாஞ்சை.
* இன்பம் - மகிழ்ச்சி, களிப்பு, உவகை, சந்தோஷம்.
* உணவு - ஊண், உண்டி, ஆகாரம்.
* உண்மை - வாய்மை, சத்தியம், மெய்.
* சூரியன் - கதிரவன், ஆதவன், ஞாயிறு, அருக்கன், பகலவன்.
* சந்திரன் - மதி, அம்புலி, நிலா, நிலவு, திங்கள்.
* வானம் - வான், விண்ணகம், விசும்பு, ஆகாயம்.
* பூமி - உலகம், பார், புவி, அகிலம், வையகம், தரணி

**குணமது கைவிடேல்**

மேலான நல்ல குணங்களை எப்பொழுதும் கைவிட்டு விடாதே.



## லூ. சாந்தமலர்

# பழமொழிகள்

* அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
* அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
* அடாது செய்பவர் படாது படுவார்.
* அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
* ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு.
* இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.
* ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
* கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.
* காக்கைக்கு தன் குஞ்சு பொன் குஞ்சு.
* குப்பையில் போட்டாலும் குன்றுமணி மங்காது.
* கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை.

**கீழ்மை யகற்று**

இழிவாகக் கருதப்படும் எச்செயல்களையும் நீக்கிவிடு.



ரா. டிலக்ஷன்

# ஒத்த கருத்துள்ள சொற்கள்.

- ✶ தோழன் - நண்பன்
- ✶ பறவை - பட்சி
- ✶ வயல் - கழனி
- ✶ காடு - வனம்
- ✶ கண் - நயனம்
- ✶ தாமரை - கமலம்
- ✶ யானை - கரி
- ✶ குதிரை - புரவி
- ✶ பூமி - புவனம்
- ✶ நட்பு - தோழமை
- ✶ கடல் - ஆழி
- ✶ தூய்மை - சுத்தம்
- ✶ கோபம் - சினம்
- ✶ ஔடதம் - மருந்து
- ✶ தந்திரம் - உபாயம்

**கொள்ளை விரும்பேல்**

பிறர் பொருளை அபகரிக்க ஆசைப்படாதே



ச. குமுதினி

## கிளி

* கிளி பழம் தின்னும்
* கிளியின் உடம்பு பச்சை நிறமானது.
* கிளியின் சொண்டு சிவப்பு நிறம்.
* அது கீ கீ என்று கத்தும்.
* கிளி பேசும்.
* கிளி அழகான பறவை.
* கிளியை செல்லப்பிராணியாக வீடுகளில் வளர்ப்போம்.

**செய்வன திருந்தச் செய்**

செய்யும் எக்காரியத்தையும் திருத்தமாகச் செய்வாயாக.



க. சனுஷாலினி

## சிந்தனைத் துளிகள்

* கல்வி கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு.
* தன்நம்பிக்கை உடையவன் எதிலும் வெற்றி பெறுவான்.
* நல்ல நூலை விட சிறந்த நண்பன் கிடையாது.
* தொடர்ந்து முயல்வதே வெற்றிக்கு வழி
* நீ பிறருக்கு செய்த உதவிகளை மறந்து விடு. மற்றவர் உனக்கு செய்த தீமைகளையும் மறந்து விடு.
* சத்தியம் என்பது மனவலிமை, சாந்தம் என்பது மன அடக்கம்.
* ஒருவனைத் தீய வழியிலிருந்து பாதுகாத்து நன்மையை விளைவிப்பது கல்வியே.
* உடலுக்கு உறுதுணை தூய்மை, உயிருக்கு உறுதுணை வாய்மை.

**சோம்பித் திரியேல்**

முயற்சி அற்றவனாக சோம்பல் உடையவனாகத் திரியாதே



ம. மிதுர்ஷிகா

# ஒருமை பன்மை

* கிளி - கிளிகள்
* நாய் - நாய்கள்
* பூனை - பூனைகள்
* புறா - புறாக்கள்
* கதிரை - கதிரைகள்
* காகம் - காகங்கள்
* சேவல் - சேவல்கள்
* குருவி - குரவிகள்
* சொல் - சொற்கள்
* பல் - பற்கள்
* கல் - கற்கள்
* முள் - முட்கள்
* புத்தகம் - புத்தகங்கள்
* கோயில்- கோயில்கள்

**ஈவது விலக்கேல்**

நல்லனவற்றை பிறருக்குக் கொடுப்பதை நீ தடை செய்யாதே



ந. மொஹமட் மாஹிர்

# மரபுத் தொடர்கள்

| | | | |
|---|---|---|---|
| * | அகடம் விகடம் | - | தந்திரம் |
| * | அகல கால் வைத்தல் | - | அளவு கடந்து போதல் |
| * | இட்டுக் காத்தல் | - | இல்லாததை சொல்லுதல் |
| * | இலவு காத்த கிளி | - | காத்திருந்து ஏமாறுதல் |
| * | எடுத்தெறிதல் | - | அலட்சியம் செய்தல் |
| * | ஏட்டுச் சுரைக்காய் | - | அனுபவமில்லாத அறிவு |
| * | ஒத்துப் பாடுதல் | - | ஆமோதித்தல் |
| * | கட்டுக்கதை | - | பொய்க் கதை |
| * | காது குத்துதல் | - | உதவி செய்தல் |
| * | கை மிகுதல் | - | அளவு கடத்தல் |
| * | காலாறுதல் | - | ஓய்ந்திருத்தல் |
| * | அடிப்படை | - | மூலாதாரம் |
| * | கை கழுவுதல் | - | முற்றாய் விலகுதல் |
| * | கையிடல் | - | ஆரம்பித்தல் |

**ஆறுவது சினம்**

மனித உணர்ச்சிகளில் அடங்க வேண்டியது கோபமேயாகும்.



நி. லதுர்ஷனா

# நல்ல பழக்கங்கள்

* எந்நேரமும் சுத்தமாக இருக்கப் பழக வேண்டும்.
* நேரத்தை பயனுள்ள வகையில் கடைப்பிடித்தல் வேண்டும்.
* பெரியவர்களை மதித்து நடத்தல் வேண்டும்.
* உண்மை பேசுதலானது உயர்வை தரும்.
* மற்றவருக்கு உதவி செய்யப் பழக வேண்டும்.
* ஏழைகளுக்கு உதவுதல் நல்ல பழக்கமாகும்.
* நண்பர்களுடன் ஒற்றுமையாக வாழப்பழக வேண்டும்.
* உணவு உண்ணும் போது முறையான விடயங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.
* நல்ல நூல்கள் நமது நண்பர்கள்,அவற்றை வாசிக்கப் பழகவேண்டும்.
* மற்றவர்கள் உரையாடும் போது இடையில் பேசக்கூடாது.
* வெற்றி,தோல்விகளை ஏற்றுக்கொள்ளும் பண்பு அவசியம்.
* எல்லோருடனும் அன்பாக பேசப்பழக வேண்டும்.
* நல்ல பழக்கவழக்கங்களை கடைப்பிடிப்பதால் நாம் நல்லவர்களாக வாழலாம்.

**நேர்பட ஒழுகு**

எவ்விடத்திலும் எத்துயர் வரினும் நேர்மை தவறாமல் நட.



ச. யுவராஜ்

# பொன் மொழிகள்

நல்ல அறிவு எந்த மூலையில் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் அதைத் தேடிச் செல்.

நல்ல எண்ணங்களைத் தூவினால் நல்ல பலனைப் பெறலாம்.

சோம்பலுக்கு இடம் கொடாமல் வாழ வேண்டும்.

ஒரு நல்ல நண்பனைப் பெறுவதற்கு ஒரே வழி நீயும் நல்ல நண்பனாக இருப்பது தான்.

ஆழ்ந்து சிந்தித்த பின் முடிவெடுப்பவனே வெற்றியை எட்ட முடியும்.

பொறுமை மிகச் சிறந்த வழிபாடு.

**நூல் பல கல்**

உனது அறிவை வளர்க்கும் நல்ல நூல்கள் பலவற்றை கற்பாயாக.



## சே. துஷாந்தன்

# பொது அறிவு

வேகமாக ஓடும் மிருகம் எது?

சிறுத்தை

உலகில் மிகப் பெரிய நீர்வீழ்ச்சி எது?

ஏஞ்சல்

பிளேக் நோய் எதனால் பரவுகிறது?

எலி

மனிதனின் குருதியை உறிஞ்சிக் குடிக்கும் நுளம்பு எது?

பெண்நுளம்பு

உலகில் மிகப்பெரிய மின் நிலையம் உள்ள நாடு எது?

சீனா

பலூனைக் கண்டுபிடித்தவர் யார்?

மொனட் கொலிபர்

உலகில் அழகிய சிறந்த நாடு எது?

சிங்கப்பூர்

குறைவான மோப்ப சக்தியுடைய விலங்கு எது?

குரங்கு

பகல் வேளையில் உணவு உண்ணாத விலங்கு எது?

ஒட்டகம்

கணனியின் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்?

சார்ள்ஸ் பபேஜ்



கே. பவித்ரா

# தபாற்கந்தோர்

பிரதான நகரங்களில் காணப்படும் தபாற்கந்தோர்களின் மூலம் நாம் பல பயன்களைப் பெறுகின்றோம். தபாற்கந்தோரிலிருந்து முத்திரை, கடித உறை, காசுக்கட்டளைப்படிவம், தந்திப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கடிதங்களையும், தந்திகளையும் அனுப்பவும், பெறவும் நாம் அங்கு செல்கிறோம். பேருந்தில் அல்லது புகையிரதத்தின் மூலமாக ஒவ்வொரு இடத்திற்கும் அவை கொண்டு செல்லப்படுகிறது.

தபால், தந்திகளை தபாற்காரர் கொண்டு வந்து தருவார். வெளிநாடுகளுக்கும் கடிதங்களை தபாற்கந்தோர் மூலம் அனுப்பலாம். தபாற்கந்தோர் எமது சில தேவைகளை நிறைவு செய்கிறது.

இயல்வது கரவேல்

உன்னால் செய்ய முடிந்த நற்காரியங்களைச் செய்யாமல் மறைத்து வைக்காதே!



**எஸ். யனுஜா**

## கணினி

இன்றைய நவீன காலத்தில் கணினி மிக முக்கிய சாதனமாகத் திகழ்கின்றது. கணினியின் தந்தை என அழைக்கப்படுபவர் சார்ல்ஸ் பபேஜ் ஆவார். முதன் முதலில் கண்டு பிடிக்கப்பட்ட கணினியின் பெயர் APPLE.

பாடசாலைகளில், அலுவலகங்களில் மட்டுமன்றி வீடுகளிலும் கூட அதிகமாக கணினி பயன்படுத்தப்படுகின்றது. கணினியின் மூலம் பல்வேறு தகவல்களை அறிந்து கொள்ளலாம். வெளிநாடுகளில் இருப்பவர்களோடு முகம் பார்த்து பேசலாம். படங்கள் கூட பார்ககலாம்.

மடிக்கணினிகளை எல்லா இடங்களுக்கும் கொண்டு செல்லலாம். இதன் மூலம் வேலைகளை சுலபமாகச் செய்து கொள்ளலாம். கணினி மின்சாரத்தால் இயங்கும் ஒரு சாதனமாகும். கணினியைப் பயன்படுத்தி பயன்பெறுவோம்.

**பழிப்பன பகரேல்**

பிறர் பழித்துச் சொல்லும் இழிவான சொற்களைச் சொல்லாதே



ஆ. இப்ராஹிம்

## நான் வைத்தியரானால்

- ✶ நான் வைத்தியரானால் நோயாளிகளுக்கு இலவசமாக மருந்து கொடுப்பேன்.
- ✶ சிறியோர் முதல் பெரியோர் வரையுள்ள ஏழை நோயாளிகளை நன்றாக கவனிப்பேன்.
- ✶ அவர்களுக்கான மருந்தை அன்போடு கொடுப்பேன்.
- ✶ ஒரு நாள் விடாமல் நான் வைத்தியசாலைக்குச் செல்வேன்.
- ✶ எனக்குப் பிடித்த தொழில் வைத்தியம். அதனால் எனது வேலைகளை ஒழுங்காகச் செய்வேன்.
- ✶ எனது வைத்தியசாலையை பல மாடிகள் வைத்து கட்டுவேன்.
- ✶ எல்லா நோயாளிகளிடமும் அன்பாக இருந்து மருந்து கொடுத்து அவர்களைக் குணப்படுத்துவேன்.
- ✶ எனது சேவையை சரிவர செய்வேன்.

**மனம் தடுமாறேல்**

எதைக் கண்டும் உள்ளம் தளர்ந்து தடுமாற்றம் அடையாதே



**மு. கஜாந்தினி**

# விடுகதைகளும் விடைகளும்

✶ வீட்டுக்குள் இருக்கும் திருடனைப் பிடிக்க முடியாது அவன் யார்?

எலி

✶ கையை வெட்டுவான் கழுத்தை வெட்டுவான் அவனை ஏன் என்று கேட்க யாருமில்லை அவன் யார்?

தையற்காரன்

✶ அடங்கிக் கிடப்பான் அலறி அலறி குரல் கொடுப்பான் காது கொடுத்தால் ஏதோ சொல்லிக் கதை அளப்பான் அவன் யார்?

டெலிபோன்

✶ ஆயிரம் பேர் சேர்ந்து கட்டிய மாளிகை ஆனால் உட்கார இடமில்லை அது என்ன?

பல்

**வைகறையில் துயில் எழு**

ஒவ்வொரு நாளும் விடியற்காலையிலே துயில் நீங்கி எழுவாயாக.



## கே. கேதீஷன்

# விடுகதைகளும் விடைகளும்

* குதிரை ஓட ஓட வால் குறைகின்றது. அது என்ன?
  ஊசி, நூல்
* அண்ணனுக்கு எட்டாது, தம்பிக்கு எட்டும் அது என்ன?
  உதடு
* கல்வீட்டுத்தாத்தா மெதுவாகத் தான் நடப்பார் அவர் யார்?
  ஆமை
* வெள்ளை மாளிகைக்குள் மஞ்சள் புதையல் அது என்ன?
  முட்டை
* தண்ணீரில் உருவானவன் தண்ணீரிலேயே கரைந்தான் அவன் யார்?
  உப்பு
* நின்றாலும் நடந்தாலும் கூடவே வரும் கறுப்புப் பூனை அவன் யார்?
  நிழல்
* உணவை எடுப்பான் உண்ணாமல் வைப்பான் அவன் யார்?
  அகப்பை
* ஆட்டத்தில் கெட்டிக்காரன் ஆனால் பாம்புக்கு பரம எதிரி அவன் யார்?
  மயில்
* ஒரு ஊருக்கு ஐந்து வழி அது என்ன?
  உள்ளங்கை
* அடிமேல் அடி வாங்கி அனைவருக்கும் ஆனந்தம் தருவான் அவன் யார்?
  மத்தளம்

## மரங்கள்

மரங்கள் மரங்கள் யாவுமே
மழையை எமக்குத் தந்திடுதே
மூன்று சுவை முக்கனிகள்
மரத்தில் இருந்து கிடைக்குதே

விறகை மரத்தில் பெற்றிடலாம்
வியாபாரம் செய்திடலாம்
தென்னை பனை மரங்களே
தேவையை நிறைவு செய்யுமே.

பலவகை மரங்கள் வளர்த்திடுவோம்
பலனை நாமும் உணர்ந்திடுவோம்.
பயன்கள் யாவும் பெற்றிடுவோம்
பாதுகாப்பாய் வளரச் செய்வோம். பா. விஷாலி

## ரோஜா

செடியில் வளரும் ரோஜா
அழகாய் மலரும் ரோஜா
சின்ன சின்ன ரோஜா
காற்றில் அசையும் ரோஜா
வண்ண வண்ண ரோஜா
சிங்கார மொட்டு ரோஜா
பூத்து குழுங்கும் ரோஜா
எமக்கு பிடிக்கும் ரோஜா தே. பவிஸ்னவி

## ரோஜா

ரோஜா ரோஜா ரோஜாப்பூ
சிவப்பு நிற ரோஜாப்பூ
மஞ்சள் நிற ரோஜாப்பூ
கண்ணை கவரும் ரோஜாப்பூ

நல்ல நல்ல ரோஜாப்பூ
நாளும் பூ பூக்கும்
நாங்கள் விரும்பும் ரோஜாப்பூ
நறுமணம் வீசும்.

அழகாய் மலரும் பூக்கள்
அலங்கரிக்க உதவும்
மனதைக் கவரும் பூக்கள்
மாலை கட்ட உதவும்.

த. தேனுஜா

## என் ஆசிரியருக்கு வாழ்த்துக்கள்

இருளை நீக்கி ஒளி தருவார்.
பயத்தை விலக்கி பலம் தருவார்.
அறிவைப் பெற்றிட உதவிடுவார்.
அன்பாய் வாழப் பழக்கிடுவார்.

பாரில் சிறந்த மானிடராய்
நாம் பண்பாய் வாழ வழிகாட்டும்
ஆசிரியரை வாழ்த்திடுவேன்.
நான் வாழ்க வாழ்கவென.

நி. லதுர்ஷனா

## அகல் ஒளி வீச ஒத்துழைத்த......................

*"திணைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்*
*கொள்வர் பயன் தெரி வார்"*

என்கிறது முப்பால் நூலில் முதற்பாவலரின் கூற்று.

இன்று இம்மலர் உங்கள் கரங்களில் தவழ உதவி புரிந்த அனைவருக்கும் நன்றி பகர கடமைப்பட்டுள்ளேன். அவ்வகையில் இம்மலர் வெளிவர அனுமதியளித்த பாடசாலை நிர்வாகத்திற்கு முதற்கண் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

எனது வேண்டுகோளுக்கிணங்க சிரமங்களை நோக்காது ஆசியுரைகளைத் தந்துதவிய கல்விப்பணிப்பாளர்கள் மற்றும் அதிபர், பிரதி அதிபர், ஆசிரிய ஆலோசகருக்கும் உள்ளம் கனித்த நன்றிகள் பற்பல.

இம்மலரில் மாணவர்களின் ஆக்கத்திறன் நூல் உருவம் பெற உதவிபுரிந்த பெற்றோருக்கும் எனது உளமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

அத்தோடு இம்மலர் நூலுருவாக கணனிமயப்படுத்திய Hill Brain நிறுவனத்திற்கும் என மனமார்ந்த நன்றிகள்.

மேலும் இம்மலர் வெளியீட்டிற்காக பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அத்தனை அன்பு நெஞ்சங்களுக்கும் எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி. சே. பவானி
தரம் 4A,
வகுப்பாசிரியை

